பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 31 சனிக்கிழமை ( 15 - 07 - 2000 ) VALAMPURI ஒலி: 208

## ★ அதிகாரப் பரவலாக்கல் யோசனை
# "பிரபா" ஏற்றுக்கொள்ளாத தீர்வு
# வெற்றி அளிக்கப்போவதில்லை !

### சித்தார்த்தன் எம். பி. பிரிட்டிஷ் பிரதிநிதியிடம் தெரிவிப்பு

[கொழும்பு விசேட நிருபர்]

**இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்த பிரிட்டிஷ் அரசின் விசேட பிரதிநிதியான வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைப்பின் அந்தரங்கச் செயலாளர் பீற்றர் வெஸ்ட் மைக்கோட் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்க்கட்சித்தலைவர்களையும் நேற்றுச் சந்தித்துப் பேச்சுநடத்தியுள்ளார்.**

தமிழ் மக்களின் விடுதலைக்கான உரிமைப் போராட்டத்தை நாம் அனைவரும் முன்னெடுத்துச்சென்றாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தான் கண்ணும் கருத்துமாக போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார் என்று புளொட் அமைப்பின் தலைவரும் எம்.பி.யுமான தர்மலிங்கம் சித்தார்த்தன் பிரிட்டிஷ் விசேட பிரதிநிதி பீற்றர் வெஸ்ட்மனிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்: இனப்பிரச்சினையில் விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்திவிட்டு தீர்வுகாண்பது இயலாத காரியம் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பீற்றர் வெஸ்ட்மன் எதிர்க்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் திடீர் சுற்றிவளைப்பு
## குண்டுச்சத்தத்தால் மக்கள் பீதி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வலந்தலையில் இருந்து துறைமுகம் வரையான பகுதிகள் நேற்றுக் காலை கடற்படையினரால் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றிவளைப்பின் போது மேலதிக படையினர் வரவழைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இச்சுற்றிவளைப்பு இடம்

(6ஆம்பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர் கடத்தல்
## மீண்டும் பயங்கரவாதமா?

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடத்தப்பட்ட சம்பவமானது மீண்டும் பயங்கரவாதத்தைநினைவூட்டுவதாகவுள்ளது என மாணவர் அமைப்புகளும், ஏனைய தொழில்அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் கடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை மாணவர்கள் சம்மேளனமும் ஐக்கிய தொழிலாளர் சம்மேளனமும் விடுத்த கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# இனப்பிரச்சினைத் தீர்வில்
# நோர்வே காலம் தாழ்த்துகிறது

### மங்களமுனசிங்க குற்றச்சாட்டு

[புதுடில்லி]

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் நோர்வே அரசு மந்தகதியில் செயற்படுவதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த மங்கள முனசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்திய ஸ்ரார் நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே மங்கள முனசிங்கமேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது

நோர்வே அரசு நல்லனவற்றையே செய்ய விரும்புகிறது;

(6ஆம்பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் நேற்று வந்தது

திருமலையிலிருந்து 150 பயணிகளுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

## வன்னிப்பகுதிக்கு அம்புலன்ஸ் கைக்குக்கிட்டியும் பயனில்லை

வன்னியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு யுனிசெவ் அமைப்பினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மூன்று ''அன்புலன்ஸ்'' வண்டிகள் வவுனியாவில் தவம் கிடப்பதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு,

தது:

இந்தஅன்புலன்ஸ் வவுனியாவில் தவம் கிடப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காமையே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை போதியளவு அம்புலன்ஸ் வசதி இல்லா

## வடக்குக் கிழக்கு மாகாணத்தில்
## விளையாட்டுத் திணைக்களம்

படுவதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த மங்கள முனசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

பிட்டுள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதா

## வடக்குக் கிழக்கு மாகாணத்தில் விளையாட்டுத் திணைக்களம் விரைவில் அமைக்கப்படும்

வடக்குக்கிழக்கு மாகணத்திற்கென தனியான விளையாட்டுத் திணைக்களம்ஒன்று அமைக்கப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இத்திணைக்களம் 2001ம் ஆண்டு தனியார் திணைக்களமாக இயங்க ஆரம்பிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணத்தில் புதிய தொழில் முயற்சி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இவை குறிப்பாக வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், திருமலை, ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கொழும்பில் நாளை கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அரச அதிபர்களுக்கும் பிரதேச செயலர்களும் அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்று நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது.

பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அரச அதிபர் க. சண்முகநாதன் நேற்று கொழும்பு சென்றுள்ளார்.

## கொள்கலனில் நவீன துப்பாக்கிகள் கொழும்பு துறைமுகத்தில் கண்டுபிடிப்பு

கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலனில் நவீன ரகத் துப்பாக்கிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலைப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் பெண் ஒருவரின் பெயருக்கு முகவரியிடப்பட்டு (6 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று வந்தது

திருமலையிலிருந்து 150 பயணிகளுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இக்கப்பல் இம்முறை பயணிகள் மிகவும்குறைவாகவே வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-7-52)

தியசாலைகளுக்கு யுனிசெவ் அமைப்பினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மூன்று ''அன்புலன்ஸ்'' வண்டிகள் வவுனியாவில் தவம் கிடப்பதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மல்லாவி வைத்தியசாலைகளுக்கே இந்த மூன்று அம்புலன்ஸ் வண்டிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்

இந்தஅன்புலன்ஸ் வவுனியாவில் தவம் கிடப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காமையே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை போதியளவு அம்புலன்ஸ் வசதி இல்லாமையால் வன்னிப்பகுதி மக்கள் பெரிய அவலங்களைச் சந்தித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# யாழ். இந்து மாணவன் 'சஞ்சீவன்' படையினரின் சூட்டுக்குப் பலி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாழிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்றில் மாணவன் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

முருகமூர்த்தி வீதி வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவரும், யாழ். இந்துக்கல்லூரி 2001 ஆம் ஆண்டு கணிதப் பிரிவு மாணவனுமாகிய சோமசுந்தரம் சஞ்சீவன் [வயது18] என்பவரே மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

( 6ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் கரை ஒதுங்கியது

(வவுனியா)

பூநகரி கடற்கரையில் பெண்ணொருவரின் சடலம் சிதைவடைந்த நிலையில் கரை ஒதுங்கி உள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இச் சடலத்தில் சிவப்புநிறச் சட்டையும்மண்ணிற பியாமாவும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## க.பொ.த உயர்தரப் பரீட்சையை பிற்போட வேண்டும்

### மாவைசேனாதி கோரிக்கை

யாழ் குடாநாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு க.பொ.த. உயர்தரப்பரீட்சையைப் பிற்போடுமாறு மாவை சேனாதிராசா எம்.பி பரீட்சைஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்

அக்கடிதத்தில்அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது:

யாழ்மாவட்டத்தில் தற்போது மாணவர் பதற்றமான சூழ்நிலையில் இருப்பதினால் அதனை அனுதாபத்துடன் கவனத்தில் எடுத்து பரீட்சைத்திகதியை மாற்றி அமைக்குமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். பல்கலைவிஞ்ஞான பீடத்திற்கு

# தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

யாழ். பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞான பீடத்திற்கு 2000/2001 கல்வியாண்டிற்கு அனுமதி பெற்றவர்களின் பெயர் விபரம் கீழே தரப்படுகின்றது.

பி. தயாகரன் கோப்பாய்
என். கமலதாசன் கரவெட்டி
எஸ். ஜி. ஜே. பால்ராஜ் சாவகச்சேரி
பி. ரெனிசன் இளவாலை
ரி. ஆதவன் சங்கானை
வை. ஆனந்தன் சுன்னாகம்
பி. கஜேந்திரா மானிப்பாய்
எஸ். ஜெகஜீவ் யாழ்ப்பாணம்
கே. நீலவர்ணன் காரைநகர்
எம். ரவிவர்மன் பருத்தித்துறை
எஸ். ராஜ்குமார் மல்லாகம்
எஸ். சர்வதாஸ் மல்லாகம்
பி. தயாபரன் தொண்டமானாறு
கே. துஷ்யந்தன் அச்சுவேலி
எஸ். கல்யாணி அல்வாய்
எஸ். லலிதகுமார் சாவகச்சேரி
எவ். என். றொஷான் யாழ்ப்பாணம்
கே. வேணுகோபன் எழுதுமட்டுவாள்
எஸ். அகிலன் கரவெட்டி
ஆர். ரம்யா யாழ்ப்பாணம்
ரி. உதயதாசன் கரவெட்டி
ரி. ஆதீசன் யாழ்ப்பாணம்
ஆர். பார்த்தீபன் யாழ்ப்பாணம்
ஆர். பிரபாகரன் பருத்தித்துறை
ஜே. பிரசன்னா வேலணை
வி. இளமதனன் பருத்தித்துறை
என். ரகுமாறன் கரவெட்டி
எம். ரமணன் கரவெட்டி
ஆர். விஷ்ணுதேவி வட்டுக்கோட்டை
ஏ. பி. குமார் கோண்டாவில்
ஆர். செந்தூரன் வவுனியா
கே. குமரன் சாவகச்சேரி
கே. பிரதீபன் சுன்னாகம்
கே. சிறீகாந் மாங்குளம்
பி. இளங்கோ யாழ்ப்பாணம்
கே. முரளீதரன் பருத்தித்துறை
ரி. செந்தூரன் புத்தூர்
ரி. குகாஜினி யாழ்ப்பாணம்
ரி. சுபாகரன் மல்லாகம்
எம். துஷ்யந்தன் யாழ்ப்பாணம்
எஸ். செந்தில்வேல் மாங்குளம்
ஆர். இளங்கோவன் சுன்னாகம்
எஸ். ரஞ்ஜிதா யாழ்ப்பாணம்
எஸ். சுதாகரன் மீசாலை
பி. ரேவதி மட்டக்களப்பு
வி. தனுஷா வட்டுக்கோட்டை
ரி. தவசுதன் கொழும்பு
எஸ். யசோதா வவுனியா
கே. பிரதீபா புலோலி
எம். சுகன்யா யாழ்ப்பாணம்
வி. துஷ்யந்தன் சாவகச்சேரி
ரி. லெனின்அறிவழகன் யாழ்ப்பாணம்
கே. அரவிந்தன் நல்லூர்
என். அருள்வேள் சாவகச்சேரி
கே. கார்த்திகா கரவெட்டி
எஸ். செல்வகரன் யாழ்ப்பாணம்
ஆர். கார்முகன் துணுக்காய்
ஜி. ஸ்ரீதேவி வவுனியா
ரி. ஜெகன் சாவகச்சேரி
வை. ஜெயசுதன் கொழும்பு
பி. ஜெகசீலன் யாழ்ப்பாணம்
ரி. மதியழகன் பூநகரி
எஸ். நக்கீரன் கிளிநொச்சி
கே. ஜெகாநந்தன் கோப்பாய்
கே. சுதராஜன் வவுனியா
எஸ். தர்மசீலன் அச்சுவேலி
என். வரதன் சுன்னாகம்
ஜி. பாமினி உடுப்பிட்டி
வி. நந்தகோபன் புலோலி
எஸ். சசிகரன் காரைநகர்
ஆர். கார்த்திகா கோண்டாவில்
எம். கருணாகரன் யாழ்ப்பாணம்
எஸ். பிறேமலிங்கம் அல்வாய்
கே. சாத்விகன் மொறட்டுவ
எஸ். சுதர்சன் கரவெட்டி
ஏ. வத்சலன் ஊர்காவற்றுறை
கே. நிஷாந்தினி கரவெட்டி
பி. அருள்குமரன் வவுனியா
ரி. அம்பிகைபாகன் யாழ்ப்பாணம்
எல். மிராளினி கரவெட்டி
எஸ். ரமணன் யாழ்ப்பாணம்
பி. தர்ஷன் சுன்னாகம்
பி. நளாயினி கொக்குவில்
என். சுதர்சன் சுன்னாகம்
கே. கணேசகுமார் கரவெட்டி
எஸ். கிஷோக்குமார் யாழ்ப்பாணம்
ஜே. ரி. லாதங்கி ஆனைக்கோட்டை
பி. நவரத்னசாமி பருத்தித்துறை
கே. பிரதீப் வவுனியா
வி. சந்திரிகா மீசாலை
ஏ. பரங்குன்றன் மானிப்பாய்
கே. விசாகன் காரைநகர்
ஏ. ஞானஒளிவேல் மல்லாவி
எஸ். சிவகரன் வவுனியா
ரி. தாரணி மல்லாகம்
எஸ். தயாழினி வட்டுக்கோட்டை
எஸ். அபிராமி திருகோணமலை
பி. கே. பொன்கலன் வவுனியா
கே. வசந்தன் நீர்வேலி
என். துஷாபன் மல்லாவி
ரி. அகிலா தெல்லிப்பழை
ஜி. நிருஷன் சுன்னாகம்
எஸ். ரஞ்சித்குமார் நல்லூர்
எஸ். மைதிலி யோகபுரம்
ஜி. ஜோர்ஜ் பிரதீபன் யாழ்ப்பாணம்
கே. கோபிரமணன் மானிப்பாய்
பி. மயூரன் யாழ்ப்பாணம்
எம். சதீஸ்குமார் சுன்னாகம்
ஏ. வாகீஸ்வரன் மாங்குளம்
வி. ஈ. நிர்மலன் யாழ்ப்பாணம்
ஏ. தர்ஷனி முல்லைத்தீவு
ரி. சி. ஜே. கிளமென்ரைன் யாழ்ப்பாணம்
எஸ். ஜீவகுமார் மானிப்பாய்
வி. சுசீந்திரன் வட்டுக்கோட்டை
எஸ். சுதன் வட்டுக்கோட்டை
ஏ. குணலதாஸ் யாழ்ப்பாணம்
ரி. கிஷாந்தன் கரவெட்டி
ரி. குமுதா கரவெட்டி
பி. சுகந்தன் பரந்தன்
ஆர். ஸ்ரீகரன் அச்சுவேலி
பி. சுபாநந்தன் பளை
பி. நவஜீவன் முல்லைத்தீவு
பி. பாலச்சந்திரன் திருகோணமலை
ரி. சிவரூபன் கிளிநொச்சி
எஸ். சதீஸ்குமார் கல்முனை
ரி. லோகேஸ்வரன் மன்னார்

(நாளை தொடரும்) (சு)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜுலை மாதம் 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றது:

### சங்கானை

| | |
|---|---|
| 143806 ஏ | 143806 பி |
| 143806 சி | 143891 ஏ |
| 143891 பி | 143984 ஏ |
| 144029 ஏ | 144106 ஏ |
| 144109 ஏ | 144148 ஏ |
| 144202 ஏ | 144202 பி |
| 144202 சி | 152505 ஏ |
| 152536 ஏ | 152553 ஏ |
| 152553 பி | 152567 ஏ |
| 155567 பி | 152567 சி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 137125 ஏ | 140589 ஏ |
| 144416 ஏ | 144430 ஏ |
| 144473 ஏ | 144473 பி |
| 144473 சி | 144495 ஏ |
| 144502 ஏ | 144502 பி |
| 144511 ஏ | 144511 பி |
| 144511 சி | 144514 ஏ |
| 144514 பி | 144514 சி |
| 144514 டி | 144525 ஏ |
| 144532 ஏ | 144608 ஏ |
| 144627 ஏ | 144627 பி |
| 144627 சி | 144627 டி |
| 144627 ஈ | 144645 ஏ |
| 144645 பி | 144649 ஏ |
| 144649 பி | 144649 சி |
| 144649 டி | 144659 ஏ |
| 144659 பி | 144690 ஏ |
| 144696 ஏ | 144696 பி |
| 144699 ஏ | 144717 ஏ |
| 144717 பி | 144717 சி |
| 144717 டி | 144717 ஈ |
| 147816 ஏ | 147816 பி |
| 147907 ஏ | 147969 ஏ |
| 148062 ஏ | 148062 பி |
| 148062 சி | 148062 டி |
| 148194 ஏ | 149902 ஏ |
| 152620 ஏ | |
| 152634 ஏ | 152634 பி |
| 152635 ஏ | 152635 பி |
| 152854 ஏ | 152940 ஏ |
| 152940 பி | 152958 ஏ |
| 152973 ஏ | 153028 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 144628 ஏ | 144684 ஏ |
| 144684 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 144527 ஏ | 144527 பி |
| 144530 ஏ | 144530 பி |
| 144569 ஏ | 144569 பி |
| 144569 சி | 144572 ஏ |
| 144572 பி | 147944 ஏ |
| 148202 ஏ | 149236 ஏ |
| 149236 பி | 149236 சி |
| 149236 டி | 149236 ஈ |
| 152569 ஏ | 152569 பி |
| 152569 சி | 152569 டி |
| 152675 ஏ | 152675 பி |
| 152683 ஏ | 152683 பி |
| 152683 சி | 152740 ஏ |
| 152740 பி | 152740 சி |
| 152740 டி | 152740 ஈ |
| 141206 ஏ | 141206 பி |
| 141206 சி | 141206 டி |
| 143826 ஏ | 143826 பி |
| 143826 சி | 143864 ஏ |
| 143864 பி | 143864 சி |
| 143864 டி | 143895 ஏ |
| 143895 பி | 144082 ஏ |
| 144084 ஏ | 144084 பி |
| 144084 சி | 144219 ஏ |
| 144220 ஏ | 144220 பி |
| 147024 ஏ | 152537 ஏ |
| 152537 பி | 152537 சி |
| 152546 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 121844 ஏ | 121844 பி |
| 143828 ஏ | 143863 ஏ |
| 143932 ஏ | 143953 ஏ |
| 143953 பி | 143953 சி |
| 144126 ஏ | 144126 பி |
| 146286 ஏ | 146313 ஏ |
| 146313 பி | 146313 சி |
| 146375 ஏ | 147238 ஏ |
| 147238 பி | 148228 ஏ |
| 148228 பி | 148240 ஏ |
| 152510 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 146320 ஏ | 146320 பி |
| 148231 ஏ | 152524 ஏ |
| 152524 பி | 152524 சி |
| 152525 ஏ | 152534 ஏ |
| 152534 பி | 152534 சி |
| 152534 டி | |

### உடுவில்

| | |
|---|---|
| 141897 ஏ | 141897 பி |
| 143788 ஏ | 143788 பி |
| 143963 ஏ | 148963 ஏ |
| 143963 சி | 144176 ஏ |
| 144176 பி | 146336 ஏ |
| 146388 ஏ | 146389 ஏ |
| 146390 ஏ | 146390 பி |

(க)

## இ. தொ. கா. பிரமுகர்கள்-ஜனாதிபதி அலரிமாளிகையில் முக்கிய சந்திப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகர்களுக்கும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவிற்கும் இடையிலான முக்கியசந்திப்புஒன்று நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது. மலையகப்பகுதியில் ஆசிரியர்நியமனம் வழங்கவேண்டிய தனிஅவசியம்குறித்தும் மலையகத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு நெருக்கடிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (க)

## பாடசாலை அதியர்கள் குழு விரைவில் அமைக்கப்படும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை அதிபர்கள் குழு ஒன்றுவிரைவில் அமைக்கப்படவுள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட்பத்திரன தெரிவித்துள்ளார்.

கல்விமுகாமைத்துவ நிலையம் ஒன்றை அண்மையில் தென்பகுதியில் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர்தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: ஜனாதிபதியின் விசேடபணிப்புரையின் பேரில் மேற்படி பாடசாலை அதிபர்கள் குழுஅமைக்கப்படும் என்றும் அதிபர்கள் எதிர்நோக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கு இக்குழுமூலம் தீர்வு காண முடியும் என்றும் மேலும்அவர் தெரிவித்தார். [க]

## நல்லை முருகன் ஆலய உற்சவம் அடுத்த மாதம் 5ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கந்தசாமி கோவில் மஹோற்சவம் எதிர்வரும்ஆவணி மாதம்ஐந்தாம் திகதி ஆரம்பமாகி ஆவணி முப்பத்தியோராம் திகதி முடிவடையவுள்ளது. இல முக்கிய உற்சவ நிகழ்வுகள் வருமாறு;

5 ஆம் திகதி சனிக்கிழமை முப 10.00 மணிக்கு கொடியேற்றம். 14 - ஆம் திகதி (10 ஆம் திருவிழா) மாலை ஐந்து மணிக்கு மஞ்சம். 22 ஆம் திகதி (18 ஆம் திருவிழா) மாலை ஐந்து மணிக்கு கார்த்திகை உற்சவம். 24 ஆம் திகதி (20 ஆம் திருவிழா) மாலை ஐந்து மணிக்கு கைலாசவாகனம். 27 ஆம் திகதி (23-ஆம் திருவிழா) மாலை ஐந்துமணிக்கு சப்பரமும், 28 ஆம் திகதி (24 - ஆம் திருவிழா) காலை ஏழு மணிக்கு தேர்த்திருவிழாவும், 29 - ஆம் திகதி (25 ஆம் திருவிழா) காலை ஏழு மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (க- 3)

## இலங்கையில் 7500 பேருக்கு எச். ஐ. வி. தொற்று தடுத்து நிறுத்த கூடுதல் கவனம் தேவை

### சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் எச். ஐ. வி. வைரஸ் மற்றும் எய்ட்ஸ் நோயினால் 7500 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட 204 பேர் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் மேற்படி கொடிய ஆட்கொல்லி நோய் தீவிரமடைய முன்அதனைத் தீர்த்துவைக்க கூடுதல் கவனம் செலுத்தப்படல் வேண்டும். எனசுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எச். ஐ. வி. வைரஸ் இனால் பாதிக்கப்பட்டவர்களில் 5100 ஆண்களும் 2200 பெண்களும் 200 குழந்தைகளும் அடங்குவர்.

இவர்களில் பெரும்பாலானோர்க்கு மேற்படி கிருமித் தொற்றுதம்மில் ஏற்பட்டிருப்பது தெரியாதிருப்பதும். இதனால் தம்மை வெளிப்படுத்தவில்லை எனவும் அவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந் நோய்த்தொற்றுக்கு இலக்கானவர்களில் பெரும்பாலானவர்கள் மேல்மாகாணங்களில் வசித்து வருவதுடன் 80 ஆம் ஆண்டுகளின் பின்பே இலங்கையில் எச். ஐ வி. தொற்று அதிகரித்துச் செல்கிறது.

உலகம் முழுவதிலும் மூன்று கோடியே 42 இலட்சம் பேர் எச்.ஐ வி. தொற்று மற்றும் எய்ட்ஸ் நோய்க்கு இலக்காகியுள்ளனர். இதனோடு ஒப்பிடுகையில் இலங்கையில் 0.09 சதவீதமானவர்களே மேற்படி கிருமித் தொற்றுக்கு இலக்காகியிருப்பதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ)

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற விருப்போர் நேரடியாக செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

பிறப்பு-இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பெற செயலகத்திற்கு வருபவர்கள் இடைத்தரகர்களால் ஏமாற்றப்படாமல் செயலக பதிவாளருடன் நேரடியாக தொடர்பு கொள்ளமுடியுமென்று மேலதிக மாவட்டப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் தூர இடங்களிலிருந்து வருபவர்கள் தமது விபரங்களை தெளிவாக குறிப்பிட்டு அத்தாட்சிப்பத்திர இலக்கம் தெரியுமானால் அவ்விலக்கத்தை குறிப்பிடுவதுடன் ரூபா ஐந்து முத்திரைஒட்டி அனுப்பினால் அவர்கள் முகவரிக்கு பிறப்பத்தாட்சிப்பத்திரம் அனுப்பப்படும்.

இதனால் அவர்கள் செயலகத்திற்கு வந்து சிரமமடையத்தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை முன்பு மாதம் ஒன்றுக்கு சுமார் மூன் நூறு வரையான விண்ணப்பங்கள் செயலகத்திற்கு வந்தன என்றும் தற்போதைய சூழ்நிலையால் குறைந்தளவான விண்ணப்பங்களே கிடைக்கப்பெறுகின்றன என்றும்: பதிவிலக்கம் தெரியாத விண்ணப்பதாரிகள் பத்து ரூபாவுக்கான முத்திரையை இணைத்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார். (க-03)

# இந்தியாவில் தொடரும் மழை
# நூற்றிற்கும் மேற்பட்டோர் பலி

## பெருமளவினர் வீடிழப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் பல பாகங்களில் தொடரும் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளில் நூறிற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். பலர் வீடுவாசல்களை இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதுடன், காயமடைந்த ஏராளமானோர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

அரசியல் நெருக்கடிகள் பலவற்றை எதிர்நோக்கி நிற்கின்ற புதுடில்லி அரசுக்கு வெள்ள அனர்த்தங்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மேலும் புதிய நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது எனக் கூறப்படுகிறது.

மகாராஷ்டிர மாநிலத்தில் பெய்த மழை, மற்றும் நிலச்சரிவுகளில் 80 இற்கும் அதிகமானோர் மரணமடைந்துள்ளனர்.

மும்பையில் நிலச்சரிவுகளினால் வீட்டு இடிபாடுகளிடையே இக்குண்டு 50 பேர் மரணத்தைத் தழுவியுள்ளனர்.

கடும் மழை காரணமாக அங்கு வீதிகள் வெள்ளக்காடாய் காட்சியளிக்கின்றன. இதனால் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன. பாடசாலைகள் அலுவலகங்கள் எவையுமே இயங்கவில்லை.

அவசரப் பணிக்கென 150 தீயணைப்புப் படை வீரர்களும் 10 அன்புலன்ஸ் வண்டிகளும் அங்கு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், சேரிப்புற மொன்றில் ஏற்பட்ட மண்சரிவினால் 50 பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரப் பிரதேசத்தில் கோதாவாரி ஆறு, வெள்ளப் பெருக்கினால் அணை உடைக்கும் ஆபத்து நிலையினை எட்டியுள்ளது.

ஹிமாலயப் பிரதேசங்களில் மழை தொடர்பான சம்பவங்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

குஜராத் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும்மழை காரணமாக சவர்நதி பெருக்கெடுத்ததனால் 4 பேர் உயிரிழந்தனர்.

## உலக தரிசனம்

இதேவேளை, இன்னும் 24 மணிநேரத்துக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் கடும்மழை பொழியலாமென வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளதானது இழப்புக்கள் இன்னும் அதிகரிக்கலாம் எனும் அச்சத்தினை தோற்றுவித்துள்ளது. (உ)

# மக்கள் சனத்தொகையை அதிகரிக்க மொஸ்கோவில் முயற்சிகள் மும்முரம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் மக்கள் தொகையை அதிகரிக்கும் நோக்கில் அந்நாட்டு ஆட்சியாளர்களால் புதிய நடைமுறைகள் சில அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மொஸ்கோவின் தென்கிழக்குப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புதிய நடைமுறையின் மூலம்குறித்த இலக்கை எட்டலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் பிரகாரம்4க்கு மேற்பட்ட பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும்ஒவ்வொரு வீடு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

98 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 99 ஆம் ஆண்டு மேற்படி பகுதியில் இறப்பு வீதம் 9 வீதத்தால் அதிகரித்துச் செல்ல பிறப்பு வீதம் 5 வீதத்தினால் வீழ்ச்சியடைந்ததைத யடுத்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொருளாதார உறுதியின்மை, உறுதியற்ற அரசில் என்பவை காரணமாக மக்கள் சனத்தொகை பெருக்கத்தில் பெருவீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப் பட்டதைத் தொடர்ந்து அவற்றை மேம்படுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் முன்னெக்கப் பட்டு வருகிறது. (உ)

## ஸ்பெயினில் குண்டுவெடிப்பு 8 பேர் காயம்

(மாட்ரிட்)

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 8 பேர் காயமடைந்துள்ளன.

சந்தை ஒன்றின் முன்பு இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றதாயினும் எவரும் உயிரிழக்கவில்லை. எனவும் சந்தையின் கட்டடத்திற்கு மட்டும் சிறுசேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# பிஜி முன்னாள் பிரதமர் சௌத்திரி படுமோசமாகத் தாக்கப்பட்டார்

(சுவா)

பிரதமர் மகேந்திரசௌத்திரி தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் பலமாக தாக்கப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக விரிவான விளக்கம் கூறபாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு மகேந்திரசௌத்திரி மறுத்துவிட்ட போதிலும் கூட தடுத்து வைக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் தாம் தாக்கப்பட்டதை பிரதமர் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஜோர்ச்ஸ்பைட் தலைமையிலான கிளர்ச்சிக் குழுவினரால் மகேந்திரசௌத்திரி தாக்கப்பட்டமையை, அவருடன் கூடவே தடுத்து வைக்கப்பட்டிருந்த அமைச்சர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேசமயம்,

தடுத்து வைக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டமையை கொண்டு அங்கு அமைதியும் ஜனநாயகமும் திரும்பி விட்டதாக எண்ணிவிட முடியாது என்றும் அந்நாடு தொடர்ந்தும் அராஜகப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக உலக நாடுகள் பலவும்கருத்து வெளியிட்டுள்ளன.

கடந்த இரண்டு மாதகாலமாக பிஜி நாடாளுமன்றக் கட்டடம் ஒன்றில் பிரதமர் மகேந்திர சௌத்திரியும் அவரது சகாக்களும் தடுத்து வைக்கப்பட்டு சில தினங்களுக்கு மூன் விடுதலையானது ஏற்கனவே தெரிந்ததே. (க-உ)

## சீனாவில் மூவருக்கு மரண தண்டனை

(பீக்கிங்)

சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ள ஜின்ஜியாங் என்னுமிடத்தில் 3பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் பிரிவினை வாதம் கோரும் சிறுசிறு குழுக்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவினைவாதம் கோருவோர்க்கெதிரான நடவடிக்கைகளை சீனா வலுப்படுத்தி வருவதனை இம்மரண தண்டனை விதிப்புக்கள் கோடிட்டுக் காட்டுவதாக நோக்குநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

# அமெரிக்கப்பெண் ஆப்கானில் கைது
## உளவு வேலை பார்த்தாராம்

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் நிவாரண உதவிப் பணிப்பாளராகக்கடமையாற்றி வந்த அமெரிக்காவைச் சேர்ந்த 70 வயதுப் பெண்மணி ஒருவரை ஆப்கானிஸ்தான் அரசு கைது செய்துள்ளது.

அமெரிக்காவின் உளவாளியாக செயற்பட்டு வருவதாக குற்றம் சாட்டியே மேற்படி பெண்மணி கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 30 வருடங்களாக அங்கு நிவாரணப் பணியாளராக இவர் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும்,உளவு பார்ப்பது தனது வேலையல்ல.பொது மக்களுக்கு உதவுவதே தனது உண்மையான நோக்கம் என தன்மீது சுமத்தப்பட்ட குற்றத்தினை அவ் அம்மையார் முற்றாகவே நிராகரித்திருப்பதாகத் தெரியவருகிறது. (உ)

# காஷ்மீர் முதல்வர் பாருக் அப்துல்லாவின் புதுடில்லி விஜயம் திடீர் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் பாருக் அப்துல்லா, சுயாட்சி சம்பந்தமாக பேசுவதற்கு புதுடில்லி செல்லவிருந்த பயணத்தினை இரு நாட்கள் ஒத்திவைத்திருப்பதாக அறிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் சுயாட்சி தொடர்பாக பிரதமர் வாஜ்பாயின் அழைப்பை ஏற்று இன்று புதுடில்லி பயணமாவதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

அண்மையில் காலமான தனது தயார் பேகம் அப்துல்லாவின் அலுவல்கள் காரணமாக உடனடியாக தன்னால் புதுடில்லி செல்ல இயலாது என அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (உ)

# ரஷ்யாவிற்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட பாகிஸ்தானியர் கைது

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கஸகஸ்தான் எல்லையில், ரஷ்யாவிற்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட 11 பாகிஸ்தானியர்களை ரஷ்ய பாதுகாப்பு படையினர் கைது செய்துள்ளனர்.

கஸகஸ்தான் விசாவுடன் விமானமூலம் வந்த மேற்படி பாகிஸ்தானியர், மொஸ்கோ செல்லும் வழியில், பயணச்சீட்டின்றி பயணம் செய்தமைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோன்று, ரஷ்யாவிற்குள் நுழைய முயன்ற 16 பாகிஸ்தானியர்களை மங்கோலியாவில் வைத்துகடந்த மாதம்ரஷ்ய பாதுகாப்பு படையினர்கைது செய்திருந்தனர்.

இதேசமயம், மேற்படி சட்டவிரோதமாக உள்நுழையும் பாகிஸ்தானியர்களுக்கும் செச்சினிய போராளிகளுக்குமிடையே தொடர்புகள் இருக்கலாம் எனும் சந்தேகமும் வலுப்பெற்றுள்ளது. (உ)

# நிமிடத்துக்கு 4 எய்ட்ஸ் நோயாளிகள் உலகில் இனம் காணப்படுகிறார்கள்

## தென்னாபிரிக்க மகாநாட்டில் தகவல்

(டர்பன்)

உலகில் நிமிடத்துக்கு 25 வயதிற்குக் குறைவான நான்கு இளைஞர்கள் எய்ட்ஸ் நோயாளிகளாகிக் கொண்டிருக்கிறார்கள். என்ற அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க டர்பன் நகரில் கடந்த மூன்று நாட்களாக நடந்து வரும் அனைத்துலக எய்ட்ஸ் மகாநாட்டிலேயே மேற்படி தகவல் வைக்கப்பட்டது.

தவறான இனச் சேர்க்கைதான் இன்று எய்ட்ஸ் பரவலுக்கான காரணமாக இருக்கின்றது என தெரிவிக்கப்படுகின்றது. (து)

# துப்பாக்கி நபர்கள் சுட்டதில் ஐந்து மாணவர்கள் துடிதுடித்துப் பலி

(காட்மண்டு)

பங்களாதேஷ் தென்கிழக்கு சிட்டஹாம் பகுதியில் அடையாளம் காணப்படாத துப்பாக்கியாளர்கள் சிலர் அரசுக்கு ஆதரவான ஐந்து மாணவர்களையும் அவர்களின் வண்டி ஓட்டுநர்களையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டனர்.

இம் மாணவர்கள் பங்களாதேஷ் சத்ராலீக் மாணவர் முன்னணி மற்றும் ஆளும் அவாமி லீக்கை சேர்ந்தவர்களென்று பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை அரச வர்த்தகக் கழகத்தினர் தாக்கப்பட்டதற்கு எதிரானபேரணியில் கலந்து கொள்வதற்காக சென்றபோதே மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். (து)

## பிஜிக்கு எச்சரிக்கை

பிஜியில் உருவாகும் புதிய அரசின் கிளர்ச்சிக்குழுத் தலைவர் ஜோர்ச்ஸ் பைட் சேர்த்துக் கொள்ளப்பட்டால், அந்நாட்டில் இராணுவ, வர்த்தகத் தடைகள் விதிக்கப்படும் என அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

புதிய அரசியல் பிரதமராகுவதற்கு ஜோர்ச்ஸ்பைட் விருப்பம் தெரிவித்திருப்பது தெரிந்ததே. (உ)

# அணு உலை எரிபொருளை மீளப்பெற பிரிட்டன் அரசு இணக்கம் தெரிவிப்பு

(லண்டன்)

ஜப்பான், பிரிட்டனில் இருந்து வரவழைத்த சர்ச்சைக்குரிய அணுஉலை எரிபொருளை திரும்பவும் பிரிட்டனுக்கு அனுப்பஇணக்கம் காணப்பட்டுள்போதும் அதனை அனுப்பிவைக்க மூன்று வருடங்கள் பிடிக்கலாம்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம், பிரிட்டன் நிறுவனம்ஒன்றில் இருந்து யப்பான்நிறுவனம் ஒன்று மறுசுத்திகரிப்புச் செய்யப்பட்ட அணுஉலை எரிபொருளினைக் கொள்வனவு செய்திருந்தது.

தவறான ஆவணங்களுடன் மேற்படி அணுஉலை எரிபொருள் அனுப்பப்பட்டிருப்பதாக கடந்தஆண்டு இறுதியில் வெளியான செய்தியை அடுத்துயப்பான்நாடு அதனை ஏற்றுக்கொள்ள மறுப்புதெரிவித்ததுடன் அதனைத்திருப்பி அனுப்புவது தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளைநடத்தி வந்தது.

இதன்பலனாய், 40 மில்லியன் டொலர் இழப்பீட்டுத் தொகையினை யப்பானுக்கு வழங்குவதற்கும் அணு உலை எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கும் பிரிட்டன் உடன்பட்டுள்ளது.

எனினும், இதனைத்திரும்ப பிரிட்டன் கொண்டுசெல்லும் போது இடையில் ஏற்படும் பயங்கரவாத நடவடிக்கைகள், மற்றும் கடத்தல்காரர்களின் அச்சுறுத்தல் என்பவை காரணமாக 3 வருடங்கள் பிடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு

# மாதம் 20லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய அவசர உத்தரவு

## அரச அதிபர் விடுத்தார்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுக்கும் பொருட்டு விவசாயிகளுக்கான மண்ணெண்ணெய் விநியோகத்தினை விவசாய சம்மேளனங்கள் ஊடாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யும் படி யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை நேற்றைய தினம் அரச செயலகத்தில் நடைபெற்ற கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், மற்றும் பிரதேச செயலர்கள் பங்கு கொண்ட கூட்டத்தில் கேட்டுள்ளார்.

இதன் பிரகாரம் விவசாய உற்பத்தியில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு மாதாந்தம் 20 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப் படவுள்ளது 'எனத் தெரிய வந்துள்ளது.

இதற்கான மண்ணெணெய்யை அவ்வப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள். தேவைப்படுகின்ற அளவை தெல்லிப்பழையிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பரல்களில் நிரப்பி விவசாய சம்மேளனத்திடம் ஒப்படைக்கும்படியும் அரச அதிபர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

அத்துடன், மண்ணெண்ணெய் விநியோகம் சம்பந்தமான இணைப்பு வேலையைக் கவனிக்கும் படி யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதனிடம் அரச அதிபர் உத்தர விட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை யாழ்ப்பாணத்திலுள்ள பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்குச் சொந்தமான பவுசர்கள் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு பெற்றோல், டீசல், போன்றவை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதெனவும் இத் திருத்த வேலைகள் முடிவடைந்ததும் எரிபொருள் விநியோக நிலமை சீரடையும் என எதிர்பார்க்கப்படுவதாக நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணத்தில் பவுசருக்கு நிலவும் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு கொழும்பில் இருந்து வரவுள்ள அடுத்த கப்பலில் இரு பவுசர்களும் கொண்டுவரப் படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

மேலும் நுகர்வோருக்கான மண்ணெண்ணைய் விநியோகத்தினை கூட்டுறவுச் சங்கங்கள் தமது கிளைகள் மூலம் வழங்கி வரும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மாதாந்தம் 6 லட்சம் மண்ணெண்ணெய் கொண்டு வரப்படுவதாக பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் பிரதேச முகாமையாளர் குறிப்பிட்டார். (க-77)

# தொடரும் கல் அகழ்வு வேலைகளால் சூழல் பெரிதும் மாசடைகிறது

## சுன்னாகப் பகுதி மக்கள் புகார்

சுன்னாகம் மின்சார நிலையத்துக்கு அருகாமையிலுள்ள அரச காணியில் தனியார் சிலர் கல் அகழ்ந்து வருவதால் அப்பகுதியில் சூழல் மாசடைதல் ஏற்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துவருகின்றனர்.

இவ்விதம் கல் அகழ்ந்து வருவதால் ஆறு அடி ஆழத்துக்கு குழிகள் ஏற்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இவ் விடயம் பற்றி இப் பகுதி மக்கள் அரச அதிகாரிகளிடம் முறையீடு செய்துள்ளனர். (க-77)

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு 370 மெற்றிக் தொன் பசளை வகை அனுமதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவசாயிகளுக்கு 1000 மெற்றிக் தொன் பசளைக்குப் பதிலாக 370 மெற்றிக் தொன் பசளை வகைகளை எடுத்துச் செல்வதற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விவசாயத்திணைக்களம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சி விவசாயிகள் விவசாய செய்கையை விட சிறு போக நெற்செய்கை செய்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். குறைவான பசளை கிடைப்பதால் விவசாயிகள் அதிருப்தி கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

தொடரும் யுத்தத்தால்

# இலங்கையில் சிறுவர் பாதிப்பு ஐ.நா.சிறுவர் பாது.நிதியம்கவலை

இலங்கையில்வாழும் சிறுவர், சிறுமியர் உள்நாட்டில் நிலவிவரும் போர் அனர்த்தங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று ஐ.நா.சிறப்பு சிறுவர் பாதுகாப்பு நிதியம் அறிக்கைவிடுத்துள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; தாம் வருகை தருவதற்கு முன்னிருந்த இரண்டு ஆண்டுகளைவிட அவர்களின் ஆரோக்கியம், கல்வி போன்ற செயற்பாடுகளும் உள அமைப்புகளும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

இதனை தடுக்க ஐ.நா.மேற்கொண்ட நடவடிக்கைகளை மீறியும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. 17 வயதிற்கு குறைந்த சிறுவர். சிறுமியர்கள் பலவந்தமாக படையில் அதிகளவில் சேர்க்கப்படுகிறார்கள்.

இது விடயம் குறித்து தமிழர் அமைப்பும். மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக அமைப்பும் குற்றம் சுமத்தியுள்ளன.

இலங்கையில் அண்மைக்காலமாக 5வயது தொடக்கம், 16வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களின் இறப்புவீதமும் கூடுதலாகவே யுள்ளது. இவர்களின் மேம்பட்ட நலனிற்காய் இன்னும் 80மில்லியன் செலவு செய்ய வேண்டியும் உள்ளது. இவ்வாறு அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-த)

# இணக்கம் காணப்பட்ட விடயங்கள் சகல கட்சிகளுக்கும் விளக்கப்படும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும், முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக சகல அரசியல் கட்சித்தலைவர்களையும் அழைத்து ஜனாதிபதி பேசுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அவருடன் நெருங்கிய தொடர்புடைய அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய அரசியல் அமைப்பு நகல் வரைவுத் திட்டத்தை சகல அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பி வைப்பதற்கும் ஜனாதிபதி செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## பூப்பந்தாட்ட போட்டி

(மந்துவில்)

பலாலி ஆசிரிய கலாசாலை பூப்பந்தாட்ட உள்ளக விளையாட்டுப் போட்டி நேற்று தொடக்கம் நடைபெற்றுவருகிறது. (த)

# வன்னி செல்வோர், போதியபணம் எடுத்துச்செல்ல, பாதுகாப்பு படையினர் அனுமதிக்க வேண்டும்

## ஆனந்தசங்கரி கோரிக்கை

(கொழும்பு)

வன்னிப்பகுதிக்கு கட்டுப்பாடின்றி பொதுமக்கள் பணத்தினை கொண்டுசெல்ல அனுமதிக்கக்கோரி தமிழர் விடுதலைக்கூட்டணி உபதலைவர் வி. ஆனந்தசங்கரி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர். கே. சந்திரானந்த டி. சில்வாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த புதனன்று அனுப்பப்பட்டுள்ள அக்கடிதத்தில்,

வன்னிப்பகுதியில் அத்தியாவசியப்பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் அங்கு பொருட்களின் விலை பெரிதும் அதிகரித்துள்ளது. இதனால் மக்களின் அன்றாடச் சீவியத்திற்கே பெருந்தொகைப்பணம் செலவிடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், வன்னிப்பகுதிக்கு செல்வோர் பத்தாயிரம் ரூபாவினை மட்டுமே எடுத்துச்செல்ல படையினர் அனுமதித்து வருகின்றனர். இதனால் மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை அனுபவித்துவருகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியாவில் இருந்து புதுக்குடியிருப்பு செல்வதற்கே படையினர் அனுமதிக்கும் பத்தாயிரம் ரூபாவில் அரைவாசிப்பணம் செலவாகிவிடுகிறது. இந்நிலையினை கருத்திற்கொண்டு மக்களின் துன்ப நிலையினைப் போக்கும்வகையில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவும் மேலும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## 2,750 மெ. தொன் மா வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்குத் தேவையான 2,750மெற்றிக் தொன் மாவினை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று வரவுள்ளதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம்யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில், சீனி விநியோகம் அடுத்த மாதமளவில் சீரடையும் என்றும், கையிருப்பை பொறுத்து அவற்றின் விநியோகம் தீர்மானிக்கப்படுமென்றும் தெரிவித்தார். (க-03)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

இராணுவத்தினருடனான பல்வேறு மோதல் சம்பவங்களின் போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு:

- 2ம் லெப். குலரஞ்சன் (செபமாலை பிறேம்குமார்) மட்டக்களப்பு
- கப்டன் பிறைசூடி/ முரசொலி (சிற்றம்பலம் கேதீஸ்வரன்) மட்டக்களப்பு
- வீரமறவன் (தங்கவேல் ஆனந்தராஜ்) கிளிநொச்சி
- மைதிலி (செபமாலை மரியநாயகம் யூலியட் பேர்னாண்டோ) மன்னார் (ந-7)

# யாழ். மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட கண்ணாடிகள் இதுவரை வரவில்லை

(தென்மராட்சி)

வடபிராந்தியத்திலுள்ள லயன்ஸ் கழகங்களின் சேவைத்திட்டத்தினை வெற்றிகரமாக அமுல் செய்ய உதவும் பொருட்டு கொழும்பிலுள்ள மாவட்டம் 306-பியின் மாவட்ட ஆளுநர்களால் 97/98 காலப்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆயிரம் மூக்குக்கண்ணாடிகளும் 98/99 காலப் பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆயிரம் மூக்குக்கண்ணாடிகளுமாக மொத்தம் 2 ஆயிரம் மூக்குக் கண்ணாடிகள் இதுவரை யாழ்ப்பாணம் வந்துசேரவில்லை.

இக்கண்ணாடிகளை இங்கு கொண்டு வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என்பது குறித்து லயன்ஸ் கழகத்தின் முக்கிய பிரமுகர்கள் மட்டத்தில் பெரும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய மக்களுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட இக்கண்ணாடிகளை இங்கு அனுப்பிவைப்பதற்கு கொழும்பிலுள்ள லயன்ஸ் பிரமுகர்கள் எவ்விதமுயற்சிகளும் மேற்கொள்ளவில்லை எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் யாழ். மத்திய கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி. மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரிகளில் இயங்கிவருகின்ற லியோ கழகங்களின் உறுப்பினர்களுக்கான 'பின்'களும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிய வருகின்றது.

இவ் இரு விடயங்கள் குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள சில முக்கிய லயன்ஸ் பிரமுகர்கள் கொழும்பிலுள்ள மாவட்ட ஆளுநர் பணிமனைக்கு தமது ஆட்சேபக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளர் என அறியப்படுகிறது. (க-77)

## ஒய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

பளைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமம் பகுதியில் தங்கியிருப்போருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் எதிர்வரும்திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் சங்கானைப் பிரதேச செயலகத்திலும், புதன்கிழமை முதல் புலோலியிலுள்ள பிரதேச செயலக உப அலுவலகத்திலும் வழங்கப்படுமென பளைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (வ-3)

# பெருமாளின் கட்சி உரிமையில் எவரும் தலையிடக் கூடாது

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாளை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியில் இருந்து நீக்கப்பட்டது தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிமன்ற விசாரணைகள் முடியும் வரை அக்கட்சியில் இருந்து வரதராஜப் பெருமாளை நீக்கக்கூடாது என்றும் அவரின் அங்கத்துவத்திற்குரிய உரிமையில் எவரும் தலையிடக்கூடாது என்றும் கொழும்பு மாவட்டநீதிவான் கே.கே. சித்திரசிறி தடை உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் செயலாளர் நாயகம் கே.பிரேமச்சந்திரனுக்கு எதிராக வரதராஜப் பெருமாள் தொடுத்துள்ள வழக்கிலேயே இத்தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (ந-7)

ஒழுக்கத்தின் எய்துவர்
மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப்பழி
- குறள்

# வலம்புரி

## உயிரினும் ஓம்பப்படும்

உலகப் பொதுமறை உரக்கக் குரல் கொடுக்கிறது ஒழுக்கம் பற்றி. இன்றைக்குவீதிகளில்காடைத்தனம்,பாடசாலை வளாகங்களில் அமைதியீன்மை என பல்வேறு வடிவங்களில் ஒழுக்கச் சீர்கேடுகள் தலை விரித்தாடுகின்றன.

இன்றைய இளைஞர்கள் நாளைய நாட்டின் மன்னர்கள். இக்கூற்று மேடையலங்காரத்திற்கும் ஏட்டில் இருப்பதற்குமாகமட்டும் இருக்கக் கூடாது. பிஞ்சுஉள்ளங்களை நஞ்சுபடியாது வளர்த்தெடுக்க வேண்டும். பெற்றோர்க்கும் ஆசிரியர்க்கும் பெரும் பங்கு உண்டு என்பதை மறக்கக் கூடாது.

வல்லவர்கள் இருந்த காலங்களில் நல்லவர்களாக விளங்கியவர்கள் இன்று அருகியே காணப்படுகிறது. வீதிகளில் உலா வர எங்கள் மண்ணின் பெண்கள் பயப்படுவதும், அசௌகரியப் படுவதும் சர்வசாதாரணமாகி விட்டது. பக்கப் பாதுகாவலருடன் பவனிவர வேண்டிய பரிதாப நிலை.

சான்றோர் நாட்டிலே நிரம்ப வாழ வேண்டுமானால் சான்றோர்களை வளர்த்தெடுக்க வேண்டும் நாடு போகிறபோக்கில் காடைத்தனம் நாட்டுக்குச் சொந்தமாகி விடும் போலிருக்கிறது.

கல்வியும் ஒழுக்கமும் இரட்டைக் குழந்தைகளாக வளர வேண்டும். அப்போது தான் கல்வி பெருமையடையும். மனிதன் மதிக்கப்படும் நிலையை எய்துவான்.

பயனற்றதாய் கல்வி மாழவிடாது சம்பந்தப்பட்ட அனைவரும் செயற்படவேண்டும். உள்ளத்தின் சிதறல் நிலையால் எடுத்ததற்கெல்லாம் முரண்படுதலும் வேண்டாதசினமும் வாழ்வைச் சுட்டெரிக்கிறது. இவற்றின் பிரதிபலிப்பாக களேபரமும்கலவரமும் தலை காட்டுகின்றன.

ஏற்கனவே பல முனைகளிலும் அவலங்களையும் அமைதியின்மையும் சந்தித்த மக்களுக்கு மேலே குறிப்பிட்டவை வேண்டாதவொன்று வீதிகளின் கதைகளிகள் வளர்ந்தோர்க்கு எரிச்சலை ஊட்டுவன. வேண்டாத விபத்துக்களை வருவிப்பன. கிள்ளிவளர்க்காத கீரைகளாய் எள்ளி நகையாடும் நிலைக்கு, வீட்டிற்கும் நாட்டிற்கும் நாசம் விளைவிப்பவராய் ஆற்றலுள்ள இளைஞர்கள் அழிந்துபோகக்கூடாது.

- அன்புடன் ஆசிரியர்

# கல்வி சமூகத்தின் மீதான தாக்குதல்

# அதிகாரிகளின் அசமந்தமே காரணம்

## அதிபர்கள் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அடாவடித்தனம் கல்விச்சமூகத்தினரால் கண்டிக்கப்படவேண்டிய தொன்றாகும் இந்த அடாவடித்தனத்திற்கு ஏற்ற நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலம் தாழ்த்தாது எடுக்க வேண்டும்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கைகலப்பு சம்பவம் தொடர்பாக வடமாகாண அதிபர்கள் விடுத்த கண்டன அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இன்றைய சூழ்நிலையில் அகதி வாழ்க்கையின் சொல்லொணாதுன்ப துயரங்களின் மத்தியிலும் எமது பாரம்பரிய சொத்தான கல்விச் செல்வத்தைப் பாதுகாத்து வரும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மீது நடத்தப்படும் எந்தவொரு அடாவடித்தனத்தையும் கல்விச் சமூகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கமுடியாது.

யாழ். நகரிலும், தென்மராட்சியிலும் இடம்பெயர்வு ஏற்பட்டு இரண்டு மாதங்களாகியும் இடம்பெயர்ந்த மக்களுக்கு எந்தவிதமான உதவிகளும் கிடைக்கவில்லை இவ்விடயத்தில் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்திருந்தால் இத்தகைய அசம்பாவிதங்கள் நடந்திருக்கமாட்டாது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## யாழ். மக்களின் அவல நிலைகுறித்து நுகர்வோர் பாதுகாப்பு சங்க கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்கள் தற்போது எதிர் கொள்ளும் அவல நிலைகளை ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று யாழ். நுகர்வோர் பாதுகாப்பு சங்கத்தினரால் அண்மையில் நடாத்தப்பட்டது.

தலைவர் பி. சிவநாதன் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் வருமாறு.

மாவின் விலை மூன்று ரூபாவால் குறைக்கப்பட்டும் யாழ்ப்பாணத்தில் - பாணின் விலை ஒரு ரூபா மட்டுமே குறைக்கப் பட்டமை எரிபொருள் குறிப்பாக மண்ணெண்ணெய், பெற்றோல் விநியோகத்தில் காணப்படும். சீரற்றதன்மை பொருட்களின் விலை ஏற்றம் 'தொலைபேசி' தொடர்புகளில் காணப்படும் முறைகேடுகள். கப்பல் போக்குவரத்தில் பயணச்சீட்டுகள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதம் போன்ற முறைகேடுகள்.

இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துவது என்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது (க)

## மாகாண மேலதிக கல்வி பணிமனையில் இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

கல்வி வலயங்களுக்கிடையேயான கல்விசார்சீர் திருத்தங்கள் மறுசீரமைப்பு விடயங்கள் தொடர்பாக நேற்று மேலதிக மாகாண கல்வித் திணைக்களத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மேலதிகமாகாணக் கல்விப் பணிப்பாளர் ச. நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் ஐந்து கல்விவலயங்களின் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி நெ. இருதயநாதன். யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ச. மகாலிங்கம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ச. செல்வராசா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

[க-12]

## படையினரால் கைது செய்யப்பட்ட இளம்பெண் விடுதலை செய்யப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 512 வது பிரிகேட்டில் தடுத்துவைக்கப்பட்ட பெண்மணி ஒருவர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டார்.

கொண்டலடி வீதி, நல்லூரைச் சேர்ந்த பானுமதி தவராசா என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

இவரது அடையாள அட்டையில் வெளிமாவட்டம் ஒன்றின் பெயர் காணப்பட்டதே இவரது கைதிற்கு காரணம்என இராணுவத்தரப்பால் தெரிவிககப்பட்டது.

இவரது கைது குறித்து யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் இராணுவத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது கைது சம்பந்தமாக 'வலம்புரி'யில் செய்தி வெளியாகியதையடுத்து சம்பந்தப்பட்டோருடன் உறவினர் தொடர்பு கொண்டதன் பின்னர் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

பயண அனுமதி பெறுவதற்கு யாழ்ப்பாணம் சென்ற வேளையிலேயே இவர் கைது செய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-12)

## கருத்தரங்கு பிற்போடப் பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் நாளை 16ஆம் திகதி நடாத்தப்படவிருந்த முழுநிலாக் கருத்தரங்கு மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பன தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக மேற்படி பேரவை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

(சு)

## இருநிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் புதிய கட்டடம் அண்மையில் ஜே. பி. குணரத்தினத்தால் திறந்து வைக்கப்பட்டது.

சுன்னாகம்பனை-தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தின் நடமாடும் சித்த மருத்துவ சேவை மயிலங்காடு சிறிமுருகன் சனசமூக நிலையத்தில் மேற்படி சங்கப் பொது முகாமையாளர் ஜே. பி. குணரத்தினம் தலைமையில் நடைபெற்றது. பெருந்தொகையான பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஸ்ரீ)

## இதந்தரும் சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ். சேவை பலபுதிய நிகழ்ச்சிகளை நேயர் ரசனைக்கு ஏற்றதாகத் தயாரித்து அளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகையில் காலை, பிற்பகல், இரவு நிகழ்ச்சிகள் அமைகின்றன.

இரவில் 9.30மணி முதல் 10.00 மணிவரை இடம்பெறும் பாடல் ஒலிபரப்பு நிகழ்ச்சியில் பழையபாடல்கள், காலத்தால் அழியாத தன்மை பெற்றவை, கண்டசாலா, ஏ.எம்.ராஜா, பி.ஏ. மோதி முதலானோருடையவை அடிக்கடி ஒலிப்பதுமிக மகிழ்ச்சி தருபவை, இதயத்துக்கு இதம் தருபவை என நேயர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். சிரேஷ்ட ஒலிபரப்பாளர் ஜோக்கிம் பெர்ணாண்டோவும் இவ்வகையில் பாராட்டுக்குரியவராகிறார். (கி)

## பத்திரிகையாளர் கூட்டம் நாளை

வட-இலங்கைபத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை 16ம்திகதி காலை 10;30மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பத்திரிகையாளர்எம். மரியரூபன் வீட்டில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர்எஸ். கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பத்திரிகையாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்பற்றி ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-77)

## வீதி திருத்தம்

[ஈச்சமோட்டை]

குண்டும் குழியுமாகக் காணப்பட்டு, பொதுமக்களின் போக்குவரத்துக்கு மிகுந்த சிரமமளித்து வந்த யாழ்ப்பாணம் பொன்னாலை வீதி, திருத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(உ-59)

தமிழக அரசியல் கண்ணோட்டம்

# அவலமுறும் தமிழர் விவகாரத்தை தமக்கு அவலாக்கிக் கொள்ள முயலும் சிறுமதியாளர்

தமிழ் நாடு அரசியல் களம் மீண்டும் தனிப்பட்ட வகையிலான அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் பரபரப்பான நிலைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் முதலமைச்சர், அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகள் பற்றியும், தமிழ்நாடு அரசு பற்றியும், மத்திய அரசில் அங்கம் வகிக்கும் வை. கோபாலசாமி தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் டாக்டர் எஸ். ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி பற்றியும் தெரிவித்து வரும் ஆக்ரோஷமான கருத்துகள் இதற்கு மூலகாரணமாக அமைவதாகக் கூறப்படுகிறது.

ஈரோடில் இடம் பெற்ற வை. கோ. வின் தமிழர் எழுச்சி மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி முதலானோர் கலந்துகொண்டது பற்றி அவர் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் அத்வானி பதவி விலக வேண்டும் என்றும் கோருகின்றார்.

விடுதலைப் புலிகளுக்கு முதல்வர்கலைஞர் மு. கருணாநிதி ஆதரவு தருவதில் முன்னணி வகிப்பதாகவும் இதனால் தமிழக அரசு பதவி நீக்கப்பட வேண்டும் என்றும் கருணாநிதியின் போக்கினால் தமிழகத்தின் ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளையும் என்றும் திருவாய் மலர்ந்திருக்கிறார் அவர்.

அவரது இக் கோரிக்கைகளுக்குப் பிரதமர் வாஜ்பாய் சாதகமான நிலையைக் கொண்டிருக்கமாட்டார் என்பது வெள்ளிடை மலை என்கிறார்கள் அரசியல் நோக்குநர்கள்.

ஏனெனில்ஏற்கனவே ஜெயலலிதாவினால் நட்டாற்றில் கைவிடப்பட்டவர் வாஜ்பாய். சாத்தான் வேதம் ஓதினாலும் அவற்றுக்கெல்லாம் இனியும் செவிசாய்க்கும் நிலையில் அவர் இருக்கமாட்டார் எனப்படுகிறது.

எது எப்படியோ, சொந்த இடம் துறந்து, தொல்லைகள் பல உற்று, ஆண்டுகள் பலவாய் பஞ்சைகளாய், பராரிகளாய் சுய உரிமை மறுக்கப்பட்ட இழிநிலையில் அல்லலுறும் ஈழத்தமிழர் விவகாரத்தை இவ்விதமெல்லாம் அடித்தள மற்ற தமிழக அரசியல் வாதிகள் கொச்சைப் படுத்தி அதில் தாம் அரசியல் இலாபம் பெற விளைவது இதயத்துக்கு ரணம் தருவது போலாகின்றதே என மனித நேயம் கொண்ட உள்ளங்கள் குமுறத்தான் செய்கின்றன.

(ஸ்ரீ)

## விளையாட்டுச் செய்தி

# 'சிங்கர் கிண்ணத்தை' இலங்கை அணி வென்றது

இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே நேற்று கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்று ''சிங்கர் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஐம்பது ஓவர் முடிவில் 7 விக்கற் இழப்புக்கு 294 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

அணியின் தலைவர் சனத் ஜெயசூரியா-68ஓட்டங்களையும், ஆனோல்ட் 51 ஓட்டங்களையும், குணவர்த்தின மற்றும் குமார் சங்ககார முறையே 49, 43 ஓட்டங்களையும் பெற்று சிறப்பாக ஆடினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஐம்பது ஓவர் முடிவில் 9 விக்கற் இழப்பிற்கு 264 ஓட்டங்களை மட்டுமேபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டத்தின் போது இலங்கை அணி ''சிங்கர்'' கிண்ணத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் ஐந்து ஆட்டங்களிலும் திறமையாக விளையாடி வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாட்டத்தின் ஆட்ட நாயகனாக 5 விக்கற்றுக் கைப்பற்றிய முரளிதரன் தெரிவு செய்யப்படார். சிங்கர் கிண்ணத்துக்கான ஆட்டங்கள் அனைத்திலும் சிறப்பாக விளையாடி தென்னாபிரிக்க வீரர் ''ஜக்கலாஸ்''க்கு கார் ஒன்றும் பரிசாக வழங்கப்பட்டது. [ந-4]

### இந்தியாவில் தலை தூக்கும் மதவெறி

# பீகாரில் கத்தோலிக்க மதகுரு சுட்டுக்கொலை

[மணிலா]

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் இனம் தெரியாதவர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்,

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த றோணிஸ் கப் ஜட்டா[வயது 46] என்பவரை வழிமறித்த கொலைஞர்கள் அவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற பின்னர் சடலத்தை வீதியில் கிடத்தி லொறியினால் தலையைச் சிதைத்துள்ளனர்.

இக்கொலையைப் புரிந்த கொலையாளிகள் ஆம் மதகுருவின் மோட்டார் சைக்கிளிலேயே தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ந-7

## இருவர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

பட்டிக் குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள வாழைப் பாடி என்னும் இடத்தில் இரண்டு பொதுமக்கள்சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி கிராம சேவை உத்தியோகத்தரான வேல்முருகு இரத்தினசிங்கம் (வயது 42), இளையதம்பி தங்கராஜா (வயது 40) ஆகிய இருவருமே சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ந 4)

## உயிரிழந்த புலிகள் விபரம்

(வவுனியா)

சரசாலை, கல்வயல்ப் பகுதியில் நேற்று இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலின் போது இரண்டு விடுதலைப்புலிகள் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

★ கண்ணன்/ பூங்குன்றன் (செல்லையா நந்தகோபால்) யாழ்ப்பாணம்

★ தேசிகன் (ஜீவராஜா சிவதர்ஷன்) யாழ்ப்பாணம் (7)

## பிரிட்டிஷ் பிரதிநிதியிடம் தமிழ்க்கட்சிகள் தெரிவித்த கருத்து

(கொழும்பு)

நேற்று பிரிட்டிஷ் பிரதிநிதியைச் சந்தித்து தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்தகருத்துக்கள் வருமாறு

**★ ரவிராஜ் (த. வி. கூட்டணி)**

அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் காணப்பட்டிருக்கும் முக்கிய விடயங்களை உள்ளடக்கிய தீர்வு யோசனைகள் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றும் விடுதலைப் புலிகள் பங்குபற்றாத பேச்சுவார்த்தைகளின் முடிவினை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த யாழ். மாநகரசபை பிரதி மேயர் ரவிராஜ் பிரிட்டிஷ் விசேட பிரதிநிதியிடம் தெரிவித்துள்ளார்.

**★ கலாநிதி விக்னேஸ்வரன் ஈ.பி.டி.பி.**

இணக்கம் கண்டுள்ள தீர்வுயோசனைகளில் நல்ல அம்சங்கள் இருப்பதாகவும் சிக்கலான பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளலாம் என்றும் ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த கலாநிதி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

**★ சுரேஷ்பிரேமச்சந்திரன்(ஈ.பி ஆர்.எல்.எவ்)**

ஐம்பது வருடங்களாக தீர்க்கப்படாத இனப் பிரச்சினையை அரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் சில வாரங்களில் பேசித் தீர்க்க முடியாது. மூன்றாம் தர மத்தியஸ்தத்துடனேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று ஈ.பி.ஆர். எல்.எவ். ஐச் சேர்ந்த சுரேஷ்பிரேமச்சந்திரன் சுரேஷ் அணி] தெரிவித்துள்ளார்.

**★ சிறிகாந்தா (ரெலோ)**

இனப்பிரச்சினை தொடர்பாக அரசு முன் வைக்க உத்தேசித்துள்ள தீர்வு யோசனை ஒரு தேர்தல் நாடகம் என்று ரெலோ அமைப்பைச் சேர்ந்த சிறிகாந்தா பிரிட்டிஷ் பிரதி நிதியிடம் தெரிவித்தார். (வ)

### இனப்பிரச்சினை...

ஆனால் அவற்றைக்கால தாமதமாக செய்கிறார்கள்.

நாம் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு செல்லத் தயாராக இருக்கின்றோம் இதனையே இந்தியாவும் ஏனைய நாடுகளும் விரும்புகின்றன.

இனப்பிரச்சினை விவகாரத்தில் காலத்தைத் தாழ்த்தும் நோர்வேக்கு இனப்பிரச்சினையைத் திர்ப்பதற்கு வேண்டிய செல்வாக்கு இல்லை என்றும் எனினும் அர்த்தப் புஷ்டியான அதிகாரப் பரவலாக்கல் திட்டமொன்றை நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது மங்கள முனசிங்க இலண்டனுக்கான தூதுவராகச் செல்லவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

### "பிரபா"...

கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்கவை சந்தித்து இனப்பிரச்சினை குறித்தும் அதற்குத் தீர்வாக முன்வைத்திருக்கும் அதிகாரப்பரவலாக்கல்குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை செய்யாமல் எந்தவிதமான தீர்வையும் காணமுடியாதென ரணில் அவரிடம் கூறியதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதனைத் தொடர்ந்து, பீற்றர்வெஸ்ட்மன் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி டி.பி, புளொட், ஈ.பீ. ஆர் எல்.எவ், ரெலோ, மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், முஸ்லிம்காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று பிற்பகல் நடந்த இச்சந்திப்பு ஒரு மணித்தியாலம்வரைநீடித்ததாகவும், இனப்பிரச்சினைதொடர்பாக தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டைத் தனித் தனியாக அவர் கேட்டறிந்ததாகவும் தெரியவருகிறது.

### கொள்கலனில்..

டுபாயில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட கொள்கலனொன்றிலேயே பத்து நவீனரகத் துப்பாக்கிகள் இருந்தமை சண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிகளில் தொலை நோக்கிக் கருவிகளும் பொருத்தப்பட்டிருப்பதாகச் சுங்க அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (வ)

### யாழ் இந்து...

தலையாழிப் பகுதியில் உள்ள நண்பர் ஒருவரின் வீட்டிற்குச் சென்று விட்டு தனது வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது பெருந்தொகையான மாணவர்களும், அதிபர், ஆசிரியர் அவரது சடலத்தை பார்வையிட்டனர்.

இதேவேளை மாணவன் சஞ்சீவனின் கொலையை கண்டித்து இன்று தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மூடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது, [வ-3-12]

## கிளிநொச்சிப் பகுதியில் மிதிவெடி இதுவரை 30 பேர் கால் இழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் மிதிவெடி மற்றும் கண்ணிவெடிகளில் சிக்கி இதுவரை 30பேர் கால்களை இழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சியில் உள்ள பெரும்பாலான விவசாய காணிகளில் அதிகளவு மிதிவெடி. கண்ணிவெடிகள் இருப்பதினால் பெருந்தொகையான காணிகளில் விவசாய முயற்சிகளை மேற்கொள்ளமுடியாது விவசாயிகள் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உருத்திரபுரத்தில் சிறுவர்கள்

(வவுனியா)

தென்மராட்சிப் பகுதியில் இயங்கிவந்த ''சிறுவர் பராமரிப்பு நிலையம்'' ஒன்றிலிருந்த சிறுவர்களில் ஒரு பகுதியினர் வன்னிப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரப் பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ள இச்சிறுவர்களுக்கு இந்து மத அமைப்புக்கள் உதவிகளைச் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தச்சிறுவர்களுக்கு உதவிகளை வழங்கிப் பராமரிக்குமாறு இவ்வமைப்புக்கள் கோரிக்கையும் விடுத்துள்ளன. (ந-4)

## தொலைபேசி உரிமையாளர் கூட்டம்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் தொலைபேசி சேவையாளர்கள் தற்போது எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட நெருக்கடிகள் பற்றி ஆராயும் ஒன்று கூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் புவியற்றுறை தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு சகல தனியார் தொலைபேசி உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

### காரைநகர்...

பெற்ற போது பலத்த குண்டுச்சத்தங்களால் காரைநகர் அதிர்ந்தவண்ணம் இருந்தது. இதனால் இப்பகுதி மக்கள் பீதியுடன் காணப்பட்டனர்.

இச்சம்பவத்தின் போது அரச ஊழியர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எவரும் ஊர்காவற்றுறைக்குச் செல்ல கடற்படையினர் அனுமதிக்கவில்லை.

இதனால் அரச ஊழியர்கள் கடமைக்குச் செல்லாமல் வீடு திரும்பியதாகவும், இச்சுற்றிவளைப்பின் போது எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)


## வங்கி அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் இயங்கும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் கிளைகளும் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி மற்றும் ஹட்டன் நஷனல் வங்கியும் 17 - 07 - 2000 ஆம் திகதி திங்கள் முதல் கீழ்க்கண்டவாறு வாடிக்கையாளருக்காகத் திறந்திருக்குமென இத்தால் அறிவிக்கின்றோம்.

(1) யாழ். நகரில் உள்ள சகல வங்கிக் கிளைகளும் ( வேலணை இலங்கை வங்கிக் கிளை உட்பட ) மு. ப. 9-30 மணி முதல் பி. ப. 1-00 மணிவரை

(2) ஏனைய சகல வங்கிக் கிளைகளும் மு. ப. 9-00 மணி முதல் பி. ப. 1-00 மணிவரை

மேலும் காசோலைகள் திருப்பப்படும் போது வழமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் இத்தால் அறியத் தருகிறோம்.

தலைவர்
யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கம்.

(கி-653)

## நாகம்ஸ்

(சுன்னாகம்)

இன்று முதல்
ரசிகர்கள்
எதிர்பார்த்திருந்த
ரஜனிகாந்,
சௌந்தர்யா,
ரம்யாகிருஷ்ணன்
நடித்த

## படையப்பா

(ரீலீஸ்)
தினசரி:
11.00, 2.30 [பு.நே]
(கி/646)

## எலைற் கல்வி நிலையம்

90 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரத்தியேக வகுப்புக்கள்
உட்பட சகல
வகுப்புக்களும் இன்று
[ப. நே] காலை 8.00
மணி முதல் ஆரம்பம்

நிர்வாகி.

(கி/651)

## கஜன்

ஊர்காவற்றுறை

ரஜனி, மீனா
நடித்த

## உழைப்பாளி

காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(கி/651)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு; யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.